**கல்கமுவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கல்கமுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மெதகம பாலர் பாடசாலையை கட்டுவதற்கான ரூபா. 1,296,326 ஆன பெறுமதியும் குடாகத்னோருவ மயானத்தின் ரூபா. 500,000 ஆன பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதனச் செலவினம் மற்றும் அனைத்து சொத்துக்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பாலர் பாடசாலை நிர்மாணப் பணியின் முடிக்கப்பட்டதால் அது உள்ளடக்கப்படவில்லை என குறிப்பிடுகின்றேன் |
| (ஆ) | திண்மக் கழிவு நிலையத்தின் கிடங்கின் பெறுமதி ரூபா. 993,222 ஆக இருந்தும், அது நிதிக்கூற்றுகளில் ரூபா. 700,000 ஆக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டதால் கணக்கீடு செய்யப்படவில்லை என தெரிவிக்றேன் |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு தொகையானது ரூபா. 3,498,278 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 3,209,,537 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக இருப்பு பெறுமதி கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இருப்புக் கூட்டுத்தொகை கணக்குகளில் மாற்றமடைந்துள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் மோட்டர் கிரேடர் கடன் மீதி ரூபா 5,299,976 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 4,310,851 என காண்பிக்கப் பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் காட்டப்பட்டிருக்கும் கடன் மீதிக்கான தொகையை நிர்மாணக் கடன்பட்டோர் இன் அடிப்படையில் காண்பிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடுகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் தொடர்பான ஆவணத்தின்படி JCB இன் கடன் மீதி ரூபா. 4,850,478 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 4,681,150 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆவணங்கள் நாளது வரையாக்கப்பட்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | JCB இயந்திரத்திற்கான ஆவணத்தில் அவ்வாறான அறவீடுகள் பதிவாகாதிருத்தல் மற்றும் கைவிடுதல் காரணமாக கணக்காய்வில் அது ரூபா 4,850,478 ஆன நிலுவை மீதியாக அவதானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன் |
| (ஊ) | ஒரே தடவையில் செலுத்தும் பணத் தொகை அறவிடுவதற்கு இல்லாத 04 கடைகளுக்குரிய நிலுவை உடனடித் தொகையாக ரூபா 1,251,441 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2018 மே 05 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையின் 5.18.10 ஆம் இலக்க முன்மொழிவின் அடிப்படையில் ஆவணத்திலிருந்த நீக்குவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு, அதற்காக அனுமதியொன்று இன்னும் கிடைக்காத காரணத்தினால் ,நிலுவையாக் மேலும் காணப்படுகிறது. |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 12,145,788 ஆக இருந்தும் நிதிக்கூற்றுகளில் அது ரூபா 12,830,133 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய சரியான கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் | குறித்த மீதிகள் அறிக்கையின் பிரதி இதனுடன் சமர்ப்பிக்கப்படுகிறது. |
| (ஏ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக மொத்தம் ரூபா 7,848,275 ஆன 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நடைபெற்ற அனர்த்த நிலைமை காரணமாக குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாமல் போனதாக ஏற்றுக் கொள்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | சபைக்கு சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மதிப்பாய்வொன்று நடாத்தப்பட்டிருக்க வில்லை. | விதிகள் பிரகாரம் சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான மதிப்பாய்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களில் உள்ளக திருத்தங்களிற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அச் சுற்றறிக்கையின் சட்டங்களை பின்பற்ற முடியாமல் போனதாக அறிவிக்கப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,757,425 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,025,962 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 4,531,635 | 4,412,832 | 4,114,592 | 1,226,515 | 4,328,400 | 4,522,716 | 4,643,676 | 929,139 |
| ii. | வாடகை | 27,973,972 | 24,310,438 | 22,235,577 | 16,848,124 | 22,042,572 | 21,106,393 | 20,374,031 | 14,773,263 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,082,150 | 1,758,480 | 1,758,480 | 6,000 | 2,057,000 | 3,197,819 | 3,197,819 | 6,000 |
| iv. | ஏனைய வருமானம் | 102,769,287 | 84,650,852 | 103,192,321 | 14,290,270 | 110,804,058 | 70,843,723 | 66,592,525 | 18,541,469 |
| | மொத்தம் | 137,357,044 | 115,132,602 | 131,300,970 | 32,370,909 | 139,232,030 | 99,670,651 | 94,808,051 | 34,249,871 |

குறிப்பு

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமான பெறுமதியில் கடந்த ஆண்டுகளில் உரிய நிலுவை பெறுவனகுளும் உள்ளடக்கும்

### 2.2.2 வீத வரியும் வரிகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் அண்டில் சொத்துக்கள் மதிப்பீடு செய்ததன் பின் கட்டப்பட்ட 25 கட்டிடங்கள் தொடர்பாக புதிய மதிப்பீடொன்று செய்து வீதவரிப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புதிய நிர்மாண ங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் விரைவாக மதிப்பீடொன்றை செய்து வீதவரி அறவீடு செய்யப்படுமென குறிப்பிடுகின்றேன் |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த கேள்வி அடிப்படையில் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் மீளாய்வாண்டிற்கு முன்பிருந்தே நிலவி வரும் 08 சந்தர்ப்பங்களுக்கு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,400,111 நிலுவை வாடகை தொகையொன்று நிலவியது. | உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 மார்ச் முடிவடையும் போது செலுத்த வேண்டிய பொது வர்த்தக தொகுதியின் 03 கடைகளுக்குரிய ரூபா. 1,146,180 ஆன தொகையும், 2019 ஜுலை 10 ஆம் திகதி முடிவடையும் போது பணம் செலுத்தி முடித்திருக்க வேண்டிய 03 கடை உரிமையாளர்களுக்குரிய ரூபா 1,896,833 ஆன தொகையும், 2019 நவம்பர் 28 ஆம் திகதி மற்றும் 2020 மார்ச் 06 ஆம் திகதி முடிவடையும் போது செலுத்த வேண்டிய கடை உரிமையாளர்கள் இருவரின் முறையே ரூபா 329,948 மற்றும் ரூபா 302,334 ஆன தொகையும், பேருந்து நிலைய கடை உரிமையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 3000 மீதியும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்காக ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இக் கடைக்காக எதிர்காலத்தில் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றேன் |

**2.2.4 ஏனைய வருமானம்**

--------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ---------------- | ------------------------------ |
| (அ) | 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பதப்படுத்தும் இயந்திரம் வாடகைக்கு வழங்குவதால் அறவிடப்பட வேண்டிய மீதியில் 2020 ஜுன் 17 ஆம் திகதி வரையில் மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,196,714 ஆக இருந்தது. | உரிய வாடகை தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ரூபா. 1,196,714 ஆன நிலுவையையும் எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றேன் |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மோட்டர் கிரேடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதன் மூலம் 2020 ஜுன் 17 ஆம் திகதி வரையில் மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 5,256,064 ஆக இருந்தது. | உரிய வாடகை தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை தொகையில் ரூபா 43,912 ஆன சரியான நிலுவை தொகையும் நிர்மாண நிலுவைத் தொகையில் ரூபா. 999,375 ஆன தொகையும் கிடைக்கப்பெ பற்றுள்ளது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2020 ஜுன் 17 ஆம் திகதி வரையில் மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 4,811,402 ஆக இருந்தது. | உரிய வாடகை தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இதில் சரியான நிலுவைத் தொகை 2020 மே 31 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 58,097,681 ஆக இருந்த போதிலும் அதில் ஒரு வருடம் மற்றும் அதை விட அதிக காலத்தை விஞ்சியுள்ள மொத்தம் ரூபா 23,004,756 ஆன மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் கொடுத்தோர் கட்டணம் செலுத்தி விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், பாதுகாப்பான காப்புறுதி வைப்பை தவிர்த்து எஞ்சியுள்ள தொகைக்கான தீர்வை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றேன் |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

#### (அ) ஊழியர் வெறறிடங்களும் மிகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் 13 வெற்றிடங்கள் நிலவியதொடு, 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட 13 உத்தியோகத்தர்கள் அனுமதி வழங்கப்படாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அங்கீகரிக்கப்படாத மேலதிக ஊழியர் பதவிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வினால் காட்டப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மை என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 25/2014 அடிப்படையில் காணப்படும் பதவிகளுக்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

(ஆ) பதில் கடமை படிகள் கொடுப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வயம்ப மாகாண சபையின் பொது சேவை ஆணைக் குழு செயலாளரின் 2019 பெப்ரவரி 13 ஆம் திகதிய கடிதத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் சபையில் பணியாற்றும் செயலாளரின் வழமையான பதவிக்குரிய சம்பளம் முகாமைத்துவ உதவியாளர் உயர் வகுப்பின் ஆரம்ப சம்பள அளவை விஞ்சியுள்ளமையால் பணியாற்றுவதற்கான கொடுப்பனவொன்று உரித்தாகாது இருந்தும், 2019 பெப்ரவரி மாதம் தொடக்கம் 2019 நவம்பர் மாதம் வரை ரூபா. 54,933 ஆன பணியாற்றுவதற்கான கொடுப்பனவொன்று வழங்கப்பட்டிருந்ததோடு புதிய நியமனக் கடிதத்திற்கு முன்பும் 2016 ஆம் ஆண்டிலிருந்து ரூபா. 157,279 பணியாற்றுவதற்கான பதில் கடமை கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | நியமனக் கடிதங்களின் பிரகாரம் பணியாற்றும் கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த சிக்கலை தீர்ப்பதற்காக தாபனக் கோவையிற்கு அடிப்படையில் பணியாற்றியதற்கான கொடுப்பனவொன்றை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளரினால் பொது சேவை ஆணைக்குழுவினால் கோரிக்கையொன்று விடுத்துள்ளமையால் தாபனக் கோவை ஏற்பாடுகளின் அடிப்படையில் கொடுப்பனவுகளை செய்ய அவசியமான நடவடிக்கைகள் எடுக்க குறித்த பிரிவுகளினால் நடவடிக்கைகளை திட்டமிட்டு தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்கமுவ பஸ் தரிப்பிட கடைகளுக்காக பல ஆண்டு காலமாக மிகக் கறைந்த தொகை அறவிடப்பட்டுக் கொண்டு இருந்ததோடு வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையரளரின் 2019 ஜனவரி 10 ஆம் திகதிய 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை மதிப்பீடு செய்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மதிப்பீட்டிற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்கு உரித்தான பலநோக்கு கட்டிடத்தில் கடைகளுக்காக 2017 இன் மதிப்பீடு செயற்படுத்தப்பட்டிருக்காததோடு உடமேல் உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 ஜனவரி 10 ஆம் திகதிய 2019/02 ஆம் இலக்க | மதிப்பீட்டை செயற்படுத்த மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் | குறித்த ஒப்பந்தத்த மேற்கொள்ளும் நடவடிக்கைக்காக அழைக்கும் போது குத்தகையாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 18(I) ஆம் பிரிவின் பிரகாரம் சரியான குத்தகையாளர்களை இனங்கண்டு சட்ட ரீதியாக ஒப்பந்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எழுத்துமூலம் மேல் முறையீடொன்றை முன்வைத்ததால் அதன் திருத்தத்திற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2018 ஜூலை 16 ஆம் திகதி எழுத்துமூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. |
| (இ) | நடைபாதை கடைகளுக்கான 2018 பெப்ரவரி 14 ஆம் திகதிய மதிப்பீடு செயற்படுத்தப்படாத காரணத்தால் 2019 நவம்பர் வரை ரூபா 743,925 ஆன வருமானத்தை சபை நிதியம் இழந்திருந்தது. இக் கடைக்காக ரூபா. 715 ஆன வாடகை அறவிடப்பட்டு வந்ததோடு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,500 மற்றும் 8,000 ஆன 02 கடைகள் ஒழுங்கு முறைப்படி 21,000 மற்றும் ரூபா 22,000 இறகு இடைப்பட்ட தொகைக்குக் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உப குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நடைபாதை கடைகள் தொடர்பான எதிர்ப்பின் அடிப்படையில் மதிப்பீட்டு திணைக்களத்தின் பரிந்துரையை எதிர்பார்த்திருந்த வேளையில் 2019 ஆகஸ்ட் 08 ஆம் திகதி பொதுச் சபையின் அனுமதியுடன் கிடைத்த பரிந்துரையை செயற்படுத்துவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி எதிர்பார்க்கப்பட்ட கடிதத்தில் பெற்றுக் கொண்ட பதில்களின் அடிப்படையில் செயற்பட்ட போதிலும் மதிப்பீட்டில் மீண்டும் பதில்கள் இல்லாது செயற்படுத்தப்பட்டிருந்தும் மீண்டும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. |
| (ஈ) | பொதுச் சந்தை கடைகளுக்காக 2011 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு அறிக்கை செயற்படுத்தப்படாதிருந்ததுடன் 2018 பெப்ரவரி 15 ஆம் திகதிய மதிப்பீட்டின்படி வாடகை அறவிடப்படாது காணப்பட்டதால் 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரை ரூபா 905,625 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் உப குத்தகைக்கு விட முடியாதிருந்தும், பெரும்பாலான குத்தகையாளர்கள் அதற்கு இணங்காது செயற்பட்டிருந்தனர். | மதிப்பீட்டுஅறிக் கைகள் செயற்படுத்தப்பட வேண்டியதோடு உப குத்தகை விடுதல் தொடர்பான உடன் படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அந்தக் கடைகள் தொடர்பாகவும் எதிர்ப்புகளை பெற்றுக் கொண்டதனால் திருத்தங்களுக்காக அனுப்பப்பட்டதுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் முலம் 2019 செப்டெம்பர் 20 ஆம் திகதிய பரிந்துரையின் அடிப்படையில் தற்பொழுது ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| (உ) பஸ் தரிப்பிட கடைகளை குத்தகைக்கு விடுவது தொடர்பான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் சபையின் அனுமதியின்றி உப குத்தகைக்கு வழங்குதல் முடியாது போனாலும் 2019 நவம்பர் 28 ஆம் திகதி நடாத்தப்பட்ட பௌதீகப் பரிசோதனையில் மாதாந்த வாடகை தொகையை விட மிகக் கூடிய வாடகைக்கு வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | உப குத்தகை தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். | குத்தகையாளரினால் வாடகை முறையாக செலுத்தப்பட்டு வருவதோடு, சிக்கல்கள் உருவாகாதிருப்பதோடு கணக்காய்வினால் காட்டப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக தேடப்படுமென அறிவிக்கப்படகிறது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச செயலகத்தினால் சபைக்கு ஒதுக்கிக் கொடுக்கப்படிருக்கு 03 மயானஙகள், மஹவெலி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கு 06 மயானங்கள், மற்றும் 08 விளையாட்டரங்குகள், சபைக்கு சொந்தமான காணி மற்றும் இஹலகம நீர் திட்ட காணி எனப்படும் காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்து ஆவணப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அவ் அனைத்து காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொள்ள மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, அந்த தகவல்கள் கிடைத்ததன் பின்னர் நிலையான சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றேன் |

**3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 02 வாகனங்கள் மற்றும் சபையினால் பராமரிக்கப்படும் 93 மயானங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயண்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை கையேற்கும் செயற்பாடுகளுக்காக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதாகவும், மயானங்களை கையேற்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. |

### 3.4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக இருக்கும் ரூபா 189,450 ஆன முச்சக்கர வண்டி எந்தவொரு பாவனைக்கும் எடுக்கப்படாது சுமார் 05 வருடங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை திருத்தம் செய்ய அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அகற்றுவதற்காக குறித்த தகவல்கள் உள்ளூராட்சித் மன்றத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |